அந்த விவர அறிக்கை வந்ததற்குப் பிறகு சொல்வார்கள் என்று அர்த்தம். நீங்கள் அதைக்கூட புரிந்துகொள்ளாமல் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்?

5. அறிவிப்பு

தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

TRUTH ALONE TRIUMPHS

2010 மே 10] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

உறுப்பினர்கள் இங்கே பார்த்து என்னிடம் பேசுங்கள். உங்களுக்குள்ளே பேசிக்கொள்ளக்கூடிய இடம் இல்லை இது.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 10-50

7. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 22	–	**காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**	தொடர்ச்சி
(ஆ) கோரிக்கை எண் 23	–	**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**	
(இ) கோரிக்கை எண் 37	–	**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**	

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010-2011 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும், வாக்கெடுப்பும், 07-05-2010 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கை எண் 22-காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), மானியக் கோரிக்கை எண் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), மானியக் கோரிக்கை எண் 37-மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின் மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. திரு. மணி, நேரம் குறித்து காலையிலே சொல்லியிருக்கிறேன்.